# சபாநாயகர் விரைவில் ராஜினுமா செய்வார்?

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 23 இதழ்: 240

யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-10-1991

## அரசு ஏற்காது

(கொழும்பு)
சபாநாயகர் எம். எச். முகமட் பதவியை ராஜினுமாச் செய்யலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.
சபாநாயகர் தனது பதவி

(4ம் பக்கம் பார்க்க)

## இக்கட்டான நிலையில் எம். எச். முகமட்

(கொழும்பு)
சபாநாயகர் எம். எச். முகமட் பெரும் இக்கட்டான நிலையில் உள்ளாரென தெரிய வருகிறது.
சபாநாயகர் முகமட்டை பதவி நீக்கம் செய்ய எதிர்க் கட்சிகள் நீதிமன்றம் செல்ல இயலாது என்றாலும் எதிர்க்

(4ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 தமிழர் கொலை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்புப் பகுதியில் கடந்த மூன்று நாட்களாக ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்

(3ம் பக்கம் பார்க்க)

★ அரசியல் நெருக்கடியில் புதிய திருப்பம்

# சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை

## எதிர்க்கட்சிகள் முடிவு

(கொழும்பு)
சபாநாயகர் எம். எச். முகமட் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சிகள் நேற்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் திரு. நிகால் செனிவிரத்திஞவிடம் சமர்ப்பித்துள்ளன.

நாடாளுமன்றக்கூட்டம் நேற்று ஒத்திவைக்கப்பட்ட பின்பு எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடிய எதிர்க்கட்சிகள் இம்

(4-ம் பக்கம் பார்க்க)

## பொதுத்தேர்தல் அல்லது அபிப்பிராய வாக்கெடுப்பு

(கொழும்பு)
தற்போதைய கட்டத்தில் ஜனுதிபதி முறை பற்றிய பிரச்சனையில் பொதுத் தேர்தலை அல்லது அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்துவதென அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திற்கு ஜனுதிபதி பிரேமதாஸா தலைமைவகித்தார். இந்த விடயம் தொடர்பாகப் பல உறுப்பினர்கள் கருத்தை அடுத்தே பொதுத் தேர்தல் அல்லது அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்துவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (சி)

## லலித் கூட்டத்திற்கு பெருமளவு மக்கள் ஆதரவு

(கொழும்பு)
ஜனுதிபதி பிரேமதாசா மீதான குற்றப்பிரேரணையை சபாநாயகர் நிராகரித்ததை தொடர்ந்து லலித் தலைமையில் ஆ. தே. கட்சி அதிருப்தியாளர் நடாத்தும் கூட்டங்களில் பெருமளவு மக்கள் கலந்து கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் சபாநாயகரின் மேற்படி நடவடிக்கையால் பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேருவார்கள் என்று கூறப்படுவதனை அதிருப்தியாளர் குழுவின் முக்கியஸ்தர் ஒருவர் மறுத்துள்ளார். (க)

## சிங்களவருக்கு இராணுவபயிற்சி

(கொழும்பு)
மொனருகலை எல்லைப் பிரதேசத்தில் வாழும் சிங்கள மக்களுக்குத் தீவிர இராணுவப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க இத்தகவலைத் தெரிவித்தார்.

இப்பகுதிகளில் வாழும் சிங்

(3ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் கூச்சல் குழப்பம்: சபை ஒத்திவைக்கப்பட்டது!

(கொழும்பு)
நேற்றுக்காலை நாடாளுமன்றம் கூடியபோது சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டதால் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது சபையை இன்று (புதன்கிழமை) காலை 10 மணி வரை ஒத்திவைத்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நேற்று சபை கூடியபோது கூச்சலும் குழப்பமும் விளைவித்ததால் தாம் சபையை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறி

(4-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையில்லாப் பிரேரணை—

## இன்றும் நாளையும் விவாதம் நடத்த அரசு குழு முடிவு

(கொழும்பு)
ஐந்து எதிர்க்கட்சிகளினுல் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்றும் நாளையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டம் ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இக் குழுக்கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு: நாடாளுமன்றில் இன்று நம்பிக்கையில்லா தீர்மானத்தை முதல் நிகழ்ச்சியாக இடம்பெறச் செய்வதுடன் நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிராக வாக்களிப்பதெனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## சபாநாயகருக்கு பத்துக் கோடி ரூபா

(கொழும்பு)
ஜனுதிபதி பிரேமதாஸாவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையை நிராகரிக்க வேண்டும் என்பதற்காக சபாநாயகருக்கு 10 கோடி ரூபா வழங்கப்பட்டதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்று சபையில் பேசும் போது இத்தகவலைத் தெரிவித்தார்.

## தமிழீழ மீட்பு நிதி விளக்க உரைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ மீட்பு நிதி பற்றிய போர்க்கால விளக்க உரைக் கூட்டம், இன்று 9ம் திகதி மாலை 6-30 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோயிலடியில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி, இளம்பரிதி (ஆஞ்சி), செல்வி சந்திரிக்கா, பரா ஆகியோர் இக்கூட்டத்தில் உரையாற்ற விருக்கிருர்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரேரணை நிராகரிப்பை ஆராய தெரிவுக் குழு நியமிக்கவும்

(கொழும்பு)
"சபாநாயகர் ஜனுப் முகமட் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை சந்தேகித்துள்ளார். அப்படியாயின் போலிக் கையெழுத்தையா நாம் சமர்ப்பித்தோம்" என எதிர்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று நாடாளுமன்றின் அறிக்கையொன்றை சமர்ப்பித்து பேசும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு எதிரான குற்றப்

(2-ம் பக்கம் பார்க்க)

## கொள்ளை நகைகள் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)
சுழிபுரம் பகுதியில் நீண்டகாலமாக கொள்ளை மற்றும் சமூகவிரோத செயல்களில் ஈடுபட்டு வந்த 20 பேர் அடங்கிய குழு ஒன்று விடுதலைப்புலிகளினுல் அண்மையில் கைது

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## கண்டெடுக்கப்பட்ட பொருள்

வவுனியா, நொச்சிமோட்டை பாலம், பாடசாலைக்கிடையில் பெண் ஒருவரால் ஒப்படைக்கப்பட்ட பெறுமதியான பொருட்களுடன் கூடிய கைப்பை. இ. துரைராசா, இல. 78, D/8, உருத்திரபுரம்முகவரியில் உள்ளது. இந்த முகவரியில் வந்து பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: அர்ச்சனா கிளினிக், சேவையர்கடை சந்தி, டிப்போ வீதி, கிளிநொச்சி, கனகபுரம். (ஏ-1637)

## வைத்திய நிலையம்

புளியங்கூடல் சந்தியில் சேவையாற்றிய நடனமுருகன் வைத்திய நிலையம் தற்காலிகமாக யாழ்ப்பாணம் சத்திரச் சந்தி கொய்யடி றோட்டில் இயங்கிவருகின்றது. டாக்டர் கந்தையா நவரத்தினம். தலைமை நிலையம்: வேலணைத் துறையில் டாக்டர் ஐயம்பிள்ளை கந்தையா. (இ-5455)

## மணமக்கள் தேவை

எமது ஸ்தாபனத்தில் செவ்வாய்க்குற்றமுள்ள இராகு கேது தோசமுள்ள சாதகர்களும் U.K, கனடா பிரான்ஸ் நாடுகளிலேயும் பணிபுரியும் தாரதாரமுள்ள சாதகர்களும் இருக்கிறார்கள். இப்படியான சாதகர்கள் ஆண் பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளவும். ABCDE 828, நாவலர் றோட். இ 5457

## வெள்ளி மகாதெசை

பிரேமதாசாவின் வெள்ளி தெசை ஆயுட்கால ஜனாதிபதியாக்கும். ஏழரைச்சனி நெருக்கடிகள் மத்தியிலும்; வெள்ளியால் மேலும் ஜனாதிபதியின் கைமேலோங்கும். செவ்வாய் வியாழ மாற்றங்களுக்கு: சோபிதா, யாழ்ப்பாணம்; நூலாசிரியர்: சத்தியதாஸன். (இ-5458)

## மட்டக்களப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையினால் 12 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், பெருமளவு தமிழரின் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏறூவூர், மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் அதிரடிப் படையினரும், ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் இணைந்து தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டது தெரிந்ததே. (க,

## பிரேரணை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணையில் இடப்பட்ட கையொப்பங்கள் செல்லுபடியற்றதாயின் அதற்கென தாடாளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு விசாரிக்கப்படவேண்டும்.

சபாநாயகர் மீது எதிர் கட்சிகள் நம்பிக்கை இழந்துள்ளமையினால் அவர் உடனடியாக பதவி விலகவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

சபைக்கு வெளியே வந்த எதிர்கட்சித் தலைவரை பத்திரிகையாளர்கள் பலர் சூழ்ந்து கொண்டனர்.

அங்கு அவர் பேசும்போது ஜனாதிபதி முறையிலான தற்போதைய முறையை மாற்றியமைத்து நாடாளுமன்ற ஜனநாயக முறையைகொண்டு வருவதற்கான பிரச்சாரத்திலும் போராட்டத்திலும் தாம் இறங்கப்போவதாகவும் இறுதிவரை போராட்டம் தொடருமெனவும் தெரிவித்தார்.

## பாராட்டு

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய வருடாந்த உற்சவ தினங்களில் செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படையினர் ஆற்றிய சேவைகளுக்கு ஆலயபரிபாலன சபைத்தலைவர் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சேனாதிராசா ஆகியோர் படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பிக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்து கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்கள். (81)

# நல்லூரில் 'நாளை 'தமிழ் விழா'

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தாய் கலை பண்பாட்டுப் பேரவையினரால் நடாத்தப்படும் 'தமிழ் விழா' நாளை 10ம் திகதி மாலை 4 மணிக்கு நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

மேற்படி விழாவில் தமிழ் அறிஞர் பொ. ஜெகநாதர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக யாழ். மாவட்ட உதவிப் பொறுப்பாளர் சிறப்புரையாற்றுவார். வித்துவான் க. சொக்கன், திரு ஆ. த. யோகநாதன் ஆகியோர் இவ்விழாவில் உரை நிகழ்த்துவார்கள்.

இவ்விழாவில் விபுலானந்தர் ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டிக்கான பரிசில்கள் வழங்கப்படுவதுடன் பட்டிமன்றம், தமிழ்த்தாய் மன்ற பிரகடனம், நாடகங்கள், இசை மழை ஆகியன இடம்பெறவிருக்கிறது. (153)

## ஆசிரியர் தின விழா

(பண்டத்தரிப்பு)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் உலக ஆசிரியர் தினம், வித்தியாலய அதிபர் திரு. கா. நடராசா தலைமையில் கொண்டாடப்பட்டது.

கடந்த புதன்கிழமையன்று நடைபெற்ற இவ்விழாவில் செல்வி நேசமலர் இராமலிங்கம் முதன்மை ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார். பண்டத்தரிப்புக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. மகேசன் இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. [73]

## 3 போட்டியிலும் முதலிடம்

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட மட்டத்தில் காங்கேசன்துறைத் தொகுதி ஆசிரியர்களுக்கும் வட்டுக்கோட்டை தொகுதி ஆசிரியர்களுக்கும் இடையே ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடைபெற்றஉதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகள் மூன்றிலும் காங்கேசன்துறைத் தொகுதி ஆசிரியர்கள் முதலிடத்தைப் பெற்று சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

இப்போட்டிகள் மூன்றும் இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. (189)

## NEW MASTER INSTITUTE

JAFFNA.

### 93 A/L

★ (விஞ்ஞான பாடங்கள் மட்டும்)

ஆரம்பம்: 19-10-1991 (சனி காலை 7 மணி)

★ எமது வழமையான ஆசிரியர் குழுவினால்

★ தாமதிக்காது உங்கள் இடத்தை உறுதி செய்து கொள்ளவும்.

(ஏ-1641)

## ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு மண்ணெண்ணெ

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு குமண கப்பலிலிருந்து எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணெ வழங்கப்பட்டது.

ஒரு ஊழியருக்கு 3 லீற்றர் 45 ரூபா வீதம் வழங்கப்பட்டது. (56)

## போத்தல்கள் தேவை

பின்வரும் விலைகளில் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

| | |
|---|---|
| ஜாம் போத்தல்கள் | ரூபா 5-00 |
| ஜாம் போத்தல்கள் (சிறியது) | ரூபா 2-50 |
| விவா, ஹோர்லிக்ஸ் (400g. மூடியுடன்) | ரூபா 5-00 |

**Taste Line Industries (pvt) Ltd**

ரேஸ்ட் லைன் இன்டஸ்றீஸ்,

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(எ-1024)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்

## முக்கிய அறிவித்தல்

### சகலதர ஊழியர்களினதும் கவனத்திற்கு

1-3-81 தொடக்கம் 31-12-90 வரையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் ETF.) வைப்பு செய்யப்பட்டுள்ள தொகை மீளளிப்பு செய்யப்படவுள்ளது, இதற்கு தேவையான படிவங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்காக கீழ்க்காணும் இட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(1) 10-10-91 காலை 8.30—பிற்பகல் 4.00 வரை முரசுமோட்டை (ஆனந்தம் அவர்களின் வீடு·நவஜீவனம் அறக்கொடை பாடசாலை முன்பாக)

(2) 12-10-91 காலை 8.30—பிற்பகல் 4-00 வரை பளை மகாவித்தியாலயம்.

(3) 13-10-91 காலை 8.30—பிற்பகல் 4.00 வரை கொடிகாமம், திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.

தற்போதய தங்கும் இடவசதிக்கேற்ப மேல் குறிப்பிட்ட ஏதாவது ஒரு மையத்தில் தேசிய அடையாள அட்டையுடன் சமூகம் தந்து தங்கள் படிவங்களை பூர்த்தி செய்யவும்

இப் படிவங்கள் பூர்த்தி செய்யத் தவறினால் அவர், அவருக்குரிய கொடுப்பனவை இழக்கநேரிடும். ஆகவே சகல தர ஊழியர்களும் (நிரந்தர, அமைய, பருவகால ஆண், பெண்) தவறாமல் சமூகம் தந்து விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்படுவதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஒப்பம்

செ. வேலாயுதபிள்ளை

பிராந்திய முகாமையாளர் (வ. பி.)

(ஏ 1642)

## இராசி பலன்

09- 10 - 1991

புதன்கிழமை

தமிழுக்கு புரட்டாதி 23

துதியை பி. இ. 2-57 வரை சித்திரை மு. ப. 9-47வரை. சித்தயோகம். இராகுகாலம் 12-02 முதல் 1-32வரை. சுப நேரம் மாலை 4-32 முதல் 6-02 வரை.

மேடம்; ஆடம்பர செலவு, அறிஞர் ஆசி, குடும்ப மகிழ்ச்சி.

இடபம்; அதிகாரிகள் பாராட்டு, பொருளுதவி, காரியச் சித்தி.

மிதுனம்: உடல் உபாதை, பயண அலைச்சல், மறதி.

கடகம்: வேண்டாத பகை, மனக் குழப்பம், அசதி.

சிங்கம்: வாக்கு வசீகரம், தொழில் மகிழ்ச்சி, பாராட்டு.

கன்னி: பதட்டம், வேலைப் பளு, குடும்ப மோதல்.

துலாம்; தொழில் லாபம், விருந்தினர் வருகை. காரிய பலிதம்.

விருச்சிகம்; புத்திரர் கவலை, தொழில் நஷ்டம், யோசனை.

தனுசு: உல்லாச வாழ்வு, புதிய சிந்தனை, மன அமைதி.

மகரம்: தொழில் முடக்கம், அன்னிய வாசம், பணவரவு

கும்பம்: ஏமாற்றம், பெண் பகை, நோய் உபாதை.

மீனம்: கடின உழைப்பு, குடும்பக் கலகம், ஆதாய மின்மை.

ஜோதிடர்

## நடமாடும் செயலகம்

### 10 10-91

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்க திணைக்களங்களுக்கு செல்லுதலும், தமது தேவைகளை நிறைவு செய்தலும் மிகக் கடினமான ஓர் இலக்காக உள்ளது.

இத்தகைய இடர்பாடுகளையும், சிரமங்களையும், வீண் காலதாமதங்களையும் தவிர்க்கும் பொருட்டு யாழ். மாவட்டத்தில் சில தொலைதூரப் பிரதேசங்களைத் தெரிந்தெடுத்து அங்கே நடமாடும் செயலக சேவையை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதலாவது நடமாடும் செயலக அமர்வு யாழ்/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் 10-10-91 வியாழக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் மாலை 4-30 மணி வரை நடைபெறும். இச் செயலகத்திற்கு எல்லா அரச திணைக்களங்களும் அதன் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி, மருதங்கேணி, பருத்தித்துறை, கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழுகின்ற பொதுமக்கள் இச்செயலகத்தினைப் பயன்படுத்தி தமது பிரச்சனைகளை தீர்வுகாண முன்வரும்படி அழைக்கப்படுகின்றனர். பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள பொதுநல அமைப்புகளும் முன்கூட்டியே தொடர்பு கொள்வதன் மூலம் இச்செயலக அமர்வினை பயனுள்ளதாக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எல்லா பிரச்சினைகளுக்கும் உடனடித்தீர்வு காண முடியாவிட்டாலும் உரிய வழிகாட்டலைச் செய்யமுடியும்.

கா. மாணிக்கவாசகர்,

அரசாங்க அதிபர்,

யாழ்ப்பாணம்.

(ஏ-1640)

# "விடுதலைப்புலிகளுக்கு-ஆயுதம்வழங்குவதற்கு தளபதிகிட்டுவுடன் லலித் பேச்சுகள்நடத்தினர்"

## ஜனாதிபதி பிரேமதாஸா உரை

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பு அமைச்சராக திரு. லலித் அத்துலத் முதலி இருந்தபோது விடுதலைப் புலிகள் தளபதி கிட்டுவுடன் எவ்வாறு பேச்சுவார்த்தை நடாத்தினாரென்றும் அவருக்கு ஆயுதங்களைக் கொடுப்பதற்கு திரு. அத்துலத் முதலி தயாராகவிருந்தாரென்பதற்கும் தம்மிடம் தகுந்த ஆதாரம் இருப்பதாக ஜனாதிபதி திரு பிரேமதாசா கூறியுள்ளார்.

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்: காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய திரு. லலித் அத்துலத் முதலி, கட்டுநாயக்காவில் வைத்து விடுதலைப்புலிகளுக்கு அரசு ஆயுதங்களைக் கொடுத்ததற்குத் தம்மிடம் ஆதாரம் இருப்பதாகக் கூறியுள்ளார்.

### லலித் தப்ப முடியாது

தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு. லலித் அத்துலத் முதலி உண்மையைத் திரித்துக் கூறுவதன் மூலம் அவர் தப்பித்துக் கொள்ள முடியாதென்பதை அவர் அறிவார்.

நாடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தபோது கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ள விரும்பாத கோழைகள் தான் இவர்கள். ஆனால் நாட்டில் நான் மீண்டும் அமைதியை ஏற்படுத்தியதும், புத்திசாலிகளாக மாறி தலைவர்களாக விளங்க விரும்புகிறார்கள். என் மீது வசை பாடுவதையோ, கண்டனம் செய்வதையோ நான் ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

ஆனால் அவர்கள் மேற்கொண்டுவரும் பிரச்சாரம் நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகமாக அமைகிறது. பாதுகாப்புப் படையினர் வெற்றியடைந்து காட்டுப் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் போது இத்தகைய பிரசாரம் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

### அமைச்சரவைக்கு தெரிவித்தேன்

விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடாத்தியபோது அது பற்றி அமைச்சரவைக்கு அறிவிக்கப்படவில்லையென எட்டு அதிருப்தியாளர்களும் மக்களுக்குக் கூறிவருகின்றபோதும், அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்ட தற்கான ஆதாரம் என்னிடம் உண்டு. பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த போது புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையை அமைத்திருந்த ஈ. பி. ஆர். எல். எவ். விடமிருந்து நாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது. அவர்கள் ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனத்தைச் செய்தார்கள், வடக்கு-கிழக்கு பகுதியில் ஈழம் உருவாகுவதற்கு அரசு அனுமதியளித்ததென எதிர்க்கட்சிகள் அப்போது குற்றம் சாட்டினார்கள். அதே எதிர்க்கட்சியினர் இன்று அதே ஈ. பி. ஆர். எல். எவ் வுடன் சேர்ந்து அரசாங்கத்தைக் கண்டிக்கத் தொடங்கியுள்ளனர்.

### இராணுவ நடவடிக்கை

ஒன்றரை வருடங்களின் பின் நான் நாட்டைப் பிளவுபடுத்த ஆயுதம் வழங்கியதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். தற்போது புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நாட்டைப் பிளவுபடுத்த நாம் அனுமதிக்க மாட்டோம்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாரதூரமான குற்றச்சாட்டுக்களைக் கொண்டுள்ளது. அரசாங்க தரப்பிற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இது தீங்கு விளைவிக்கக்கூடியதாகும். இதில் ஜனாதிபதிக்கு எதிராக எந்த விதமான குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படவில்லை. ஆனால் அரசின் மீதே பாரிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொண்டு அதனைத் தோல்வியுறச் செய்வதன் மூலம் நடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குற்றச்சாட்டுக்களை நீக்கிக்கொள்ளவேண்டும். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்துக்கும் பதிலளிக்கக்கூடிய ஆவணங்களும், அத்தாட்சிகளும் என்னிடம் உள்ளன:

### அப்பட்டமான பொய்

புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை, ஈரோஸ் அமைப்புடன் ஒப்பந்தம் செய்து கொண்டமை வடபகுதியில் யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்யப்பட்டமை ஆகியவை மக்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தவறான வழியில் இட்டுச் செல்வதற்கு தெரிவிக்கப்பட்ட அப்பட்டமான பொய்கள் என்பதை விபரத்துடன் ஜனாதிபதி நிரூபித்துக்காட்டினார்.

ஜனாதிபதி தொடர்ந்து பேசுகையில்; நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி இங்கு உறுதிப்பாடு இல்லையென வெளிநாடுகளில் எடுத்துக்காட்டுவதற்காக இத்தகைய பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளது.

### பெருந்தொகைப் பணம்வழங்கச் சூழ்ச்சி

அதிருப்தியாளர்கள் 8பேரும் தம்மோடு 40 ஐ. தே. க. உறுப்பினர்கள் சேர்ந்துகொள்வார்களென கூறிவந்தனர். ஆனால் அவர்கள் இதில் வெற்றியடையவில்லை. அதிருப்தியாளர்கள் அமைப்பதற்கு எற்பாடுசெய்துள்ள திட்டமிட்டுள்ள அரசாங்கத்தில், அரசாங்கத்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படுமென உறுதியளிக்கப் பட்டுள்ளது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு தமக்கு பெருந்தொகைப் பணத்தை வழங்க அவர்கள் முன்வந்துள்ளதாகவும், சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அதனை நிராகரித்துள்ளனர். பெரும் பணத்தை சம்பாதித்துக்கொண்டவர்களும் தற்போதைய அரசாங்கத்தில் இடமளிக்கப்படாதவர்களும் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர்கள் சிலரும், சில சிரேஷ்ட அரசு அதிகாரிகளும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு சார்பாக வாக்களிக்கும்படி கேட்டுள்ளார்கள். ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை சபாநாயகர் நிராகரித்ததனால் நாட்டை எதிர்நோக்கியிருந்த கஷ்ட நிலை நீங்கியுள்ளது.

### அவர்களுக்கும் தெரிவியுங்கள்

கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட 8 பேருடன் இணைந்ததாக கூறப்படும் ஏனைய 4 பேருக்கும் அரசு நாடாளுமன்றக் குழு எடுத்த முடிவை அறிவிக்கவேண்டுமென்றும், இவர்கள் இன்னமும் கட்சியில் இருப்பதாகவும் ஆனால் அரசாங்க நாடாளுமன்றக்குழு முடிவுக்கு எதிராக அவர்கள் செயற்பட்டால் அவர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் படுமென்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (சி)

---

## அகதிகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க செஞ்சிலுவைசங்கம்ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அகதிகளாக இடம்பெயர்ந்தோருக்கு புதியவீடுகளை செஞ்சிலுவை சங்கம் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளதுடன் விவசாயிகளுக்கு உகந்த திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் உள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய செஞ்சிலுவைச்சங்க புதிய தலைவர் திரு. எஸ். சிவராசலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் செஞ்சிலுவை சங்க வடகிழக்கு மாகாண புனர்வாழ்வு பொறுப்பாளர் திரு. தயாளதேவன், செஞ்சிலுவைசங்க செயலாளர் திரு பொ. விநாயகமூர்த்தி திரு. என். நாகேந்திரன் கெயர் நிறுவனபிரதிநிதி திரு. பத்திநாதர் ஆகியோரும் உரையாற்றினார்கள். (83)

---

## இன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கப்பலில் வந்த 139 தபால் பொதிகளும் சிரமத்தின் மத்தியில் நேற்று யாழ். தபாலகத்திற்கு வந்து சேர்ந்தன.

இக்கப்பலில் வந்த வெளிநாட்டு, உள்நாட்டுத் தபால் விநியோகம் இன்று நடைபெறுமெனக் கூறப்படுகிறது (வி)

---

### சிங்களவருக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள மக்கள் அடிக்கடி தாக்கப்பட்டு வருவதை தடுக்கு முகமாக ராணுவப் பயிற்சிக்கான அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

---

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சூராவத்தை முத்துமாரியம்மன் கோவில் நவராத்திரி விழா 16ம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

17ம் திகதி பகல் மானம்பூ திருவிழாவும் அன்று பிற்பகல் சுன்னாகம் மயிலணி விஸ்வநாத பெருமான் விஜயயாத்திரை மேற்கொண்டு அம்மான் ஆலயத்திற்கு வருகைதந்து மானம்பூ உற்சவம் நடைபெறும். தினமும் சிறப்பு சொற்பொழிவுள் நடைபெறும்.

0 0 0

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்து இளைஞர் சங்கம் நவராத்திரி விழாவை சிறப்பாக கொண்டாடுவது என்று தீர்மானித்துள்ளது.

∴

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஆகியவற்றில் நவராத்திரி விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. (72)

0 0 0

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பாரதிவித்தியாலயத்தில் 17-ம் திகதி வாணி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது அன்றைய தினம் நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள் பட்டிமன்றம் என்பன இடம் பெறவுள்ளன.

---

## முதலுதவி பயிற்சி பெற்றவரின் உண்மையான சேவை அத்தியாவசியமாக தேவை

(பண்டத்தரிப்பு)

விபத்துகளும் அநியாய உயிரிழப்புகளும் அதிகரித்துவரும் இக்கால கட்டத்தில்முதலுதவி பயிற்சி பெற்றவர்களின் தன்னலமற்ற உண்மையானசேவை அத்தியாவசியமாக தேவைப்படுகின்றது. போராட்ட காலத்திற்கேற்ற முதலுதவிப் பயிற்சிகளை சகல மாணவர்களும் பெற்று எமது மக்களுக்கு தியாக சிந்தையுடன் சேவையாற்ற முன்வரவேண்டும்."

இவ்வாறு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் முதலுதவிப் பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வடமாகாண ஆணையாளர் டாக்டர் கந்தன் இன்னாசித்தம்பி குறிப்பிட்டார்.

சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற இவ்வைபவத்திற்கு கல்லூரி அதிபர் என். கந்தசாமி தலைமை வகித்தார்.

இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எம். திருச்சிற்றம்பலம் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டார்.

முதலுதவிப் பயிற்சி பெற்ற ஐம்பது மாணவர்களுக்கான சான்றிதழ்களை திருமதி ஜொவித்தா இன்னாசித்தம்பி வழங்கினர். (72)

---

## நல்லியக்கசபை நவராத்திரிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை காரைநகர் சிறுவர் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தும் நவராத்திரிவிழா பேச்சு, பாட்டு, நடனம், காவடி வினோத உடைப்போட்டிகள் 12-ம் திகதி சனிக்கிழமைகாலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் நல்லைஆதீன முதல்வரின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும். அன்றைய தினம் யாழ்ப்பாணம் பாலர் கல்விக்கழக ஆசிரியைகளின் பொம்மலாட்டமும், காரைநகர் சிறுவர் பாடசாலை ஆசிரியைகளின் கும்மி நடனமும் நடைபெறும்.

---

## 91-ம் நாள் நினைவஞ்சலி



வீரவேங்கை
பொன்னன் நடராசா
(செல்வா)

தாய் மடியில்: 1971 - 06 - 09

தாயக மடியில்: 1991 - 07 - 11

வடவரணி தந்த வீரா மாற்றுர்
மறைந்திருந்து தாக்கியதால் மடிந்த செல்வா
சாற்றிய வீரருடன் விண்ணில் நின்று
தமிழீழம் மலரும்நாள் அடைக சாந்தி

நண்பர்கள்

வரணி வடக்கு, வரணி. (ஏ-1643)

★ படையினர் உதவியுடன்

# மட்டு. எல்லைப் பகுதியில் சிங்களவர் குடியேற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு எல்லைப் பகுதியில் தமிழருக்கு சொந்தமான வீடுகள் மற்றும் காணிகளில் படையினரின் உதவியுடன் சிங்களவர்கள் அத்துமீறிக் குடியேற்றப்பட்டு வருகிறார்கள்.

இவ்வாறு குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு விவசாய செய்கைக்கென விதைநெல் மற்றும் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

இதேவேளையில் மட்டக்களப்பு பொலநறுவையை இணைக்கும் முயற்சிகளும் படையினரின் உதவியுடன் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் குடியேற்றப்படும் சிங்கள முஸ்லீம்களுக்கு துப்பாக்கிகளும் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## இக்கட்டான நிலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிகள் சபாநாயகரை குறை கூறுவதை அடுத்து சபாநாயகர் முகமட் தாமாகவே பதவி விலகும் வகையில் பெரும் இக்கட்டான நிலையில் உள்ளாராம்.

## நாடாளுமன்றத்தில் கட்சி நிலவரம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் இன்றைய கட்சி நிலவரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| மொத்த உறுப்பினர் | 225 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 125 |
| நேற்று வரை ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர்களின் தொகை | 12 |
| சுதந்திரக் கட்சி | 67 |
| சமசமாஜக் கட்சி (ஐக்கிய சோஷலிஸ முன்னணி | 01 |
| (ஐக்கிய சோஷலிஸ முன்னணியில் ஒரு காலி ஸ்தானம் உள்ளது.) | |
| நவ சமசமாஜக் கட்சி | 01 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | |
| ஈ. பி. ஆர். எல். எப். | 05 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 02 |
| ரெலோ | 02 |
| ஈ. என். டி. எல். எப் | 01 |
| சுயேட்சைக் குழு அவினி, மட்டக்களப்பு (சுரேஸ்) | 02 |
| யாழ்ப்பாணம், திருமலை (இன்னும் முழுமையாக நியமனமாகிப் பதவி ஏற்கவில்லை) | 11 |

(வி)

## தபாலக வெளிநடப்பு இறுதியில் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். தபால் ஊழியர்கள் நேற்று மேற்கொள்ளவிருந்த வெளிநடப்பு கடைசி நேரத்தில் கைவிடப்பட்டதாக சம்பந்தப்பட்ட ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி ஊழியர்களின் கோரிக்கைகள் ஒருவார காலத்துக்குள் பூர்த்திசெய்து தருவதாக உயர் அதிகாரிகள் வாக்குறுதி அளித்ததன் பேரிலேயே தாம் வெளிநடப்புச் செய்வதை ஒத்திவைத்ததாகவும், அந்த ஊழியர் தெரிவித்தார். (வி)

## சபாநாயகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிலிருந்து விலகுவதை சில காலங்களுக்கு ஒத்திவைக்கும்படி அரசதரப்பினர் அவரை வற்புறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை சபாநாயகர் ஏதோவொரு நெருக்கடியினாலேயே நிராகரித்ததாகவும் இதனையடுத்தே அவர் ராஜினாமா செய்யமுடிவு செய்துள்ளதாகவும் அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

## கலந்துரையாடல்

(கொழும்பு)

யாழ் மாவட்ட பல நோ. கூ. சங்க, தெ. ப. பொ. உ. வி கூ. சங்க, ஏனைய கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நாளை 10-ம் திகதி காலை 10-00 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் (மணியம் கட்டிடம்) நடைபெறும். எனவே தவறாது சமுகம் கொடுக்கும்படி யாழ். மாவட்ட கூட்டுறவுப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

## வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு தெல்லிப்பளையை நோக்கி நடாத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் சரவணமுத்து சிவசுப்பிரமணியம் என்னும் வயோதிபர் படுகாயமடைந்துள்ளார்.

## நம்பிக்கையில்லாப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையியற் கட்டளை இரகசிய வாக்களிப்பிற்கு இடமளிக்காதபடியால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடாது என்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. (இ)

## அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவை எடுத்தன.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை முதலில் ஏற்றுக்கொண்ட சபாநாயகர் பின் அதனை நிராகரித்ததன் மூலம் தமது பதவிக்குரிய கண்ணியத்தைத் தவறவிட்டதாகவும் தொடர்ந்தும் இவரது செயற்பாடுகள் நம்பிக்கைக்குரியதாக அமையாதென்றும் கூறியே எதிர்க்கட்சிகள் இந்த பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளன.

சபாநாயகர் மீது குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் நாடாளுமன்றம் இன்று கூடும்போது அதற்கு ஜனாப் முகமட் தலைமை வகிப்பாரா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, நவலங்கா சமசமாஜக் கட்சி, சமசமாஜக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஐக்கிய சோஸலிஸ முன்னணி, ஆகிய எதிர்க்கட்சிகளே இப் பிரேரணையைக் கொண்டுவந்துள்ளன.

# சபாநாயகர் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுக்காமல் நிராகரித்தது தொடர்பாக சபாநாயகர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க எதிரணியினரும் எதிர்க்கட்சிகளும் முடிவு செய்துள்ளன.

இந்தப் பிரேரணையை முதலில் ஏற்றுக்கொண்ட சபாநாயகர் பின் அதனை நிராகரித்ததற்கான காரணம் எதிரணியினருக்குதிருப்தியளிக்காததே இதற்குக் காரணமெனக்கூறப்படுகிறது.

குற்றப் பிரேரணையை ஏற்றுக் கொண்டதற்கு சபாநாயகரை முதலில் கண்டித்த ஐ. தே. க. வினர் அதனை நிராகரித்ததையிட்டு மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (இ)

## அகதிகள் மீதான தாக்குதல் ஜெர்மனியில் அதிகரிப்பு

(பொன்)

மேற்கு ஜெர்மனியில் வெளிநாட்டு அகதிகள் தங்கியிருக்கும் முகாம்கள் மீது 'நாஸி' ஆதரவு இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்கள் தற்போது அதிகரித்து வருகின்றன.

இத்தாக்குதல்கள், மேற்கு ஜெர்மனியின் முக்கிய நகரங்களான பொன், ஸ்ருட்காட், ஹனோவர், ஸார்லாந்து ஆகிய இடங்களில் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன.

இதுவரை அகதிகளுக்கு எதிராக 370 தாக்குதல்கள் நடைபெற்றுள்ளதாகவும், இதில் 53 தீவைப்புச் சம்பவங்கள் அடங்குமென்றும், கடந்த மாதம் மட்டும் 43 தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸாரின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி சம்பவங்களில் இதுவரை கானா நாட்டைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே மரணம் அடைந்ததாகவும், பலர் காயம் அடைந்துள்ளதாவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வி)

## நாடாளுமன்றில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

நேற்றுக்காலை சபை கூடியதும் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை தாம் நிராகரிப்பதாக சபாநாயகர் சபையில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

சபாநாயகரின் இந்தமுடிவை தாம் எதிர்ப்பதாக எதிர்க்கட்சித் தலைவியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சபையில் கூறினார்.

எதிர்க்கட்சியினரின் பதவி மூப்பங்களில் ஏதாவது பிரச்சினைகள் இருக்கின்றதா என திருமதி பண்டாரநாயக்க வினவியபோது, அதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லையென சபாநாயகர் பதிலளித்தார்.

இதனையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. க்கள் சபையில் கூச்சலும் குழப்பமும் விளைவித்ததையடுத்து சபாநாயகர் சபையை இன்று காலை வரை ஒத்திவைத்தார்.

## கொள்ளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டதையடுத்து அவர்கள் வசமுள்ள நகைகள் யாவும் விடுதலைப்புலிகளினால் மீட்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் நாளை 10ம் திகதி காலை 10மணிக்குகோண்டாவிலிலுள்ள விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி செயலகத்தில் தத்தமது நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

கண்ணன் என்பவர் இக்கொள்ளைக் கோஷ்டிக்குத் தலைமை வகித்து வந்ததாகவும் விடுதலைப்புலிகளின் பெயரைப் பாவித்து ஆயுதமுனையில் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் தெரிக்கப்படுகிறது. (ச)

## தமிழீழ மீட்பு நிதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி விளக்க உரைக் கூட்டம், உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலும், புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்திக்கு அருகாமையிலும் நாளை 10ம் திகதி மாலை நடைபெறும்.

11ம் திகதி மாலை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி வடக்கு அம்மன் கோவிலடியிலும் நடைபெறும்.

12ம் திகதி மாலை மல்லாகம் பழம்பிள்ளையார் கோவிலடியிலும், தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது. (153)


## மரண அறிவித்தல்

### வீரவேங்கை லெப். நிதி (நடராஜா ஜெயராஜா)

பேசாலையைச் சேர்ந்த நடராசா ஜெயராசா (லெப். நிதி) ஆனையிறவு ஆ. க. வெளி மோதலின் போது 5 8-91ல் வீரமரணமடைந்தார். இவர் காலஞ்சென்ற நடராஜா பத்மாவதி ஆகியோரின் மகனும் ஜீவபவானி ஆனந்தராஜா, ரகுநாதன், ஸ்ரீபாஸ்கரன், சித்ரா குணராஜா, பவானி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற தர்மகுலசிங்கத்தின் மைத்துனரும், சஜீவா, அருள்பவானி ஆகியோரின் மாமனுருமாவார்.

தகவல்: பெற்றோர், சகோதரர்.

வட்டுவத்தை,
அல்வாய் தெற்கு, அல்வாய். (ஏ-1644)

### காசிப்பிள்ளை செல்லத்துரை (வவுனியா பிரபல வர்த்தகர்)

மதவாச்சியை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான பிரபல வர்த்தகர் காசிப்பிள்ளை செல்லத்துரை காலமானார். இவர் செல்வநாச்சியாரின் அன்புக் கணவரும் நடராசாவின் அன்புத்தம்பியும் மகேஸ்வரன் (மங்களா றேடர்ஸ், வவுனியா) சிவநேஸ்வரன், லக்குணேஸ்வரன், ராஜேஸ்வரன் (கனடா) மங்களேஸ்வரன் (சுவிஸ்), மங்களேஸ்வரி யோகேஸ்வரி (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ராமதாஸ் (டாக்டர் மதவாச்சி) ராஜேஸ்வரி லீலாவதி, சிவரூபராணி கிருஷ்ணலீலா ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுஜா, தர்மஜா, மணிமாறன் சிவாஜினி சிறீகரன், சிவதர்ஷினி, சிவரோகிணி விஜிதரன், றஜனி, அனுசா, சிந்துஜா, சங்கீதா ரகுவரன், றமேஷ், நிஷாந்தன், துஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை (09 - 10 - 91) (இன்று) புதன்கிழமை 12-00 மணி அளவில் வவுனியா இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: செ. மகேஸ்வரன்.
(மகன்)
(மங்களா றேடர்ஸ், வவுனியா)
(சி-5456)


யாழ். மாவட்டத்திற்கு

# பணம் அனுப்பிவைக்க திறைசேரியினர் அசிரத்தை

(கொழும்பு)

யாழ். மாவட்டத்துக்கு மாதாந்தம் தேவைப்படும் பணத்தை அனுப்பி வைப்பதில் கொழும்பு திறைச்சேரிசேரியிலுள்ள அதிகாரிகள் மிக அசிரத்தை காட்டுவதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாதாந்தம் பத்துக் கோடி ரூபாவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கு முன்னர் திறைசேரி அதிகாரிகள் ஒப்புக்கொண்டிருந்தபோதிலும், மாதாந்தம் ஆறு அல்லது ஏழு கோடி ரூபாக்களையே யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதாகவும் அதுவும் யாழ். செயலகத்திலிருந்து ஒரு உத்தியோகத்தர் மாதாந்தம் கொழும்பு வந்து திறைசேரி அதிகாரிகளுக்கு ஞாபகப்படுத்திய பின்னர் மேற்படி பணத்தை யாழ் மாவட்டத்துக்கு அனுப்புவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. (வி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களதுஅச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Postoffice Lanka under licence Number B/10836/81.